தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

மகளிர் முற்றம்

விலை ரூ.15 மலர் 22 | இதழ் 10 பிப்ரவரி 2021

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடன் இணைப்பு வழங்கும் திட்டம் துவக்கம்

திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

பிப்ரவரி 2021

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

கடைகோடி கிராமத்தில் வசிக்கும் பெண்ணும் பொருளாதார சுய சார்பு பெற வேண்டும் என்பதை குறிக்கோளாகக் கொண்டு சுய உதவிக் குழுக்களின் முன்னேற்றத்திற்காக தமிழக அரசு ஏராளமான திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

மகளிர் மேம்பாட்டிற்கான அரசின் திட்டங்களை மகளிரிடையே கொண்டு சேர்க்கும் உன்னதப் பணியினை மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்க அலகுகள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலின்படி சிறப்புற மேற்கொண்டு வருகின்றன என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கங்கள் மூலம் அமைக்கப்பட்டுள்ள சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், பகுதி அளவிலான கூட்டமைப்புகள், நகர்ப்புற அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றுக்கு ஆதார நிதி, சமுதாய முதலீட்டு நிதி, நலிவுற்றோர் மேம்பாட்டு நிதி போன்றவை வழங்கப்படுகின்றன என்பதும், சுய உதவிக் குழுக்களின் பொருளாதாரத்தை உயர்த்திட அவர்களுக்கு வங்கிக் கடன் இணைப்புகள் வழங்குவதில் நாம் குறித்த இலக்கை விட அதிகமான சாதனைகளை எட்டியுள்ளோம் என்பதையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி.

வங்கிக் கடன் இணைப்புக்காக இந்த வருடம் நமக்கு வழங்கப்பட்ட இலக்கு ரூ.14,000 கோடி. ஆனால் ஜனவரி மாத நிறைவில் நாம் எட்டியதோ ரூ.15,653.04 கோடி. வங்கிக் கடன் மூலம் உங்களது வாழ்வாதாரமும், வாழ்க்கைத் திறமும் நாளுக்கு நாள் மேம்பட்டு வருவது இந்நிறுவனத்தின் நிகழ்கால சாதனையாகும்.

விவசாயத்தில் ஈடுபடும் பெண் விவசாயிகள் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி விவசாயப் பணிகள் மேற்கொள்ளும் வகையில் விவசாய இயந்திரங்களின் வாடகை மையங்களை அமைக்க மானியத்துடன் கூடிய கடனுதவி, பணிபுரியும் பெண்களுக்கு இரண்டு சக்கர வாகனங்கள் வாங்க மானியம், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரும் வகையில் விற்பனைக் கண்காட்சிகளை நடத்துதல் போன்ற ஏராளமான திட்டங்களை செயல்படுத்துவதில் நாம் நாட்டிலேயே முன்னணியில் இருக்கிறோம் என்பது பெருமைக் கொள்ளக் கூடியவையாகும்.

குறிப்பாக நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தனிநபர்கள், சுய உதவிக் குழுக்கள், தெருவோர வியாபாரிகள், ஒத்த தொழில் குழுக்கள் போன்றவற்றிற்கு கடன் உதவிகள் வழங்குதல், திறன் மற்றும் வேலைவாய்ப்புப் பயிற்சி மூலம் வேலை வாய்ப்பினை உருவாக்கும் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சிகள் போன்றவை வழங்கப்படுவதுடன், பாரதப் பிரதமரின் PM-SVANidhi திட்டத்தின் கீழ் தெருவோர வியாபாரிகளுக்கு கடனுதவிகள் போன்றவையும் வழங்கப்பட்டு வருகின்றன என்பதும், இதன் மூலம் நகர்ப்புற ஏழை மக்களின் வாழ்வாதாரம் முன்னேற்றம் அடைந்து வருவதும் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது.

அதேபோல் தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளிக்கப்பட்டு பல்வேறு நிறுவனங்களில் பணி வாய்ப்புகள் பெற்றுத் தரப்படுகின்றன. தற்போது அத்திட்டத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக ISO தரச் சான்றிதழ் வழங்கப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை”

என்ற குறள் வரிகளுக்கேற்ப உங்களின் அயராத உழைப்பால் மேலும் பல வெற்றிகள் உங்களைத் தேடிவரும் என்பது திண்ணம்.

தற்போது கோடைக்காலம் துவங்க உள்ளதால் இனிவரும் சில மாதங்களுக்கு நீரின் தேவை அதிகமாகும். “நீரே வாழ்வின் அமுதம்’ என்பதைக் கருத்தில் கொண்டு நீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும். அதேபோல் கோடைக்கால நோய்களும் இக்காலத்தில் அதிகம் தாக்கக் கூடும் என்பதால் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியம். **“பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா... பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா...’** என்ற பாரதியின் கவிதை வரிகளை களிப்புடன் நினைவு கூர்ந்து உங்கள் அனைவருக்கும் சர்வதேச மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

குறளும்-பொருளும்

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாம் சொல்

பேசும் போது கேட்பவரை தன் வயப்படுத்தும் பண்புகளுடன், கேட்காதவரும் கேட்க விரும்புமாறு பேசுவது சொல் வன்மையாகும்.



உள்ளடக்கம்...

72வது குடியரசு தின விழா கொண்டாட்டம்	05
மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடன் இணைப்பு வழங்கும் திட்டம் துவக்கம்	06
மகளிர் சுய உதவி குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்	08
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்து மடல்கள் வழங்குதல்	15
ஒரு சொல் கேளீர்...	18
தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்	21
DDU-GKY திட்டத்தின் கீழ் இளைஞர்களை அணிதிரட்டும் முகாம்	25
தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்	27
மாதர்தம்மைப் போற்றுவோம்...!	31
முற்றக் கச்சேரி	33

இன்பாக்ஸ்

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

www
மின்னஞ்சல் | wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு
முற்றம்

மலர் 22
இதழ் 10
பிப்ரவரி 2021
விலை ரூ.15

கௌரவ ஆசிரியர்கள்	**திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,** மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், முதன்மை செயல் அலுவலர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., செயல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், தலைமை செயல் அலுவலர் (பொ), தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்	**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்
ஆசிரியர் குழு	**ஜா. சம்பத்,** கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	கே. சுமதி, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	எஸ். சாமுவேல் இன்பதுரை, கூடுதல் இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
	கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
நிர்வாக ஆசிரியர்	**ரா. ஜீவா,** பொது மேலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிதி நிர்வாகம்	**சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்	**எஸ். விஜயலட்சுமி,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
துணை ஆசிரியர்	**ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர்	**சு. சசிகலா**
பிழை திருத்துபவர்	**எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு	**ஆ. சுரேஷ் பாபு**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்', தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை, நுங்கம்பாக்கம்,
சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413
தொலைநகல் : 044 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

கோவிட்-19 உலகில் பெண்களுக்கு தலைமைத்துவம்...!

அன்புள்ள வாசகர்களுக்கு

சென்ற ஆண்டு உலகையே வாட்டி வதைத்த கொரோனா பெருந்தொற்றானது கணிசமாக குறைந்து வருகிறது. அதோடு, இந்த ஆண்டு பருவமழை நன்றாக பெய்து, நீர்நிலைகள் நிரம்பி வழிந்து, விவசாய பெருமக்களுக்கு பெருமகிழ்ச்சியை கொடுத்திருக்கிறது. ஏறக்குறைய ஐந்து மாத கால முழு ஊரடங்கால் இயற்கை பாதுகாக்கப்பட்டதால்தான் பருவமழை சரியாக பொழிந்துள்ளது என வல்லுநர்கள் கூறுகின்றனர். எனவே, இப்படிப்பட்ட பேரிடர்கள் வந்தாலும் அதன் மூலமாக பெரும் நன்மையும் ஏற்படுகிறது என்ற நேர்மறையான சிந்தனையோடு இந்த ஆண்டை நம்பிக்கையோடு ஆரம்பிப்போம்.

பெண்களின் பிரச்சனைகளை அவ்வப்போது விவாதித்து வந்தாலும், பெண்களின் உரிமை மற்றும் கல்வி ஆகியவற்றை வலியுறுத்துவதற்கும், பல வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் அனைத்து உலக நாடுகளும் குரல் எழுப்பும் நாள்தான் அனைத்துலக மகளிர் தினம். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தில் அனுசரிக்கப்பட்டுவரும் மகளிர் தினத்தை ஒரு கொண்டாட்டமாகவும், சடங்காகவும் மட்டுமே எடுத்துக் கொள்ளாமல், ஆண்களுக்கு நிகராக பெண்களின் நிலையும் உயர வேண்டும் என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாளாக இந்த மகளிர் தினம் அனுசரிக்கப்படுவதுதான் சரியானதும் மற்றும் சிறப்பானதும் கூட.

தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டு, முறையான பயிற்சிகள் அளிப்பதோடு தமிழக அரசு பல்வேறு சலுகைகளையும், பெண்களுக்கான வளர்ச்சித் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. ஆனால், சுய உதவிக் குழு என்றாலே கடன் வாங்குவதுதான் என்ற கருத்து பொதுவாக நிலவி வருகிறது. கடன் பெறுவது பொருளாதார வளர்ச்சிக்கு வழி வகுக்கும் என்றாலும், பெண்கள் ஆற்றல் மிக்கவர்களாக வளர்வதற்கு அவர்களின் தலைமை பண்பு, கல்வி அறிவு மற்றும் உரிமை பற்றிய விழிப்புணர்வு ஆகியவை அவசியமாகிறது.

அகில உலக மகளிர் தினத்தில் ஐக்கிய நாடுகள் சபை இந்த ஆண்டிற்கு முன்வைத்துள்ள கருத்தாகிய கோவிட்-19 உலகில் சமமான எதிர்காலத்தை அடைவதற்கு பெண்கள் தலைமைத்துவம் அவசியமாகின்றது. இதனையே மையக் கருத்தாகக் கொண்டு நிகழ்ச்சிகளை நடத்துவது சிறந்தது. அனைத்து மகளிருக்கும் முற்றம் மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு,

(எஸ்.சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்

72வது குடியரசு தின விழா கொண்டாட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. பன்வாரிலால் புரோகித் அவர்கள் 26.01.2021 அன்று சென்னை மெரினா கடற்கரையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் முன்னிலையில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். உடன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு. ப. தனபால், உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி நீதியரசர் திரு. சஞ்சீப் பானர்ஜி, தலைமைச் செயலாளர் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

சென்னை, மெரினா கடற்கரையில் 26.01.2021 அன்று நடைபெற்ற குடியரசு தின விழாவில், வீரதீரச் செயலுக்கான அண்ணா பதக்கங்கள், காந்தியடிகள் காவலர் பதக்கம், கோட்டை அமீர் மத நல்லிணக்கப் பதக்கம், திரு. சி. நாராயணசாமி நாயுடு நெல் உற்பத்தி திறனுக்கான விருது, சிறந்த காவல் நிலையத்திற்கான முதலமைச்சரின் விருது ஆகிய விருதுகளையும், பதக்கங்களையும் பெற்றவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடன் இணைப்பு வழங்கும் திட்டம் துவக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் 04.02.2021 அன்று தலைமைச் செயலகத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 20,186 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 1,083.96 கோடி ரூபாய் மற்றும் 317 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 277.79 கோடி ரூபாய், என மொத்தம் 1,361.75 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்கும் அடையாளமாக, 7 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடனுதவிக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, தலைமைச் செயலாளர் முனைவர் ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு கடன் இணைப்பு வழங்கும் திட்டம் துவக்கம்

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வங்கிகளில் குறைந்த வட்டியில் கடன் பெறவும், வங்கிகளுடன் வலுவான நல்லுறவை ஏற்படுத்திக்கொண்டு வருமானம் ஈட்டக்கூடிய பொருளாதார தொழில்கள் தொடங்கி நடத்திடவும், அதிக அளவு கடன்கள் தொடர்ச்சியாக பெறவும் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்புத் திட்டம் வழிவகை செய்கிறது. இதன்மூலம் பெண்களின் பொருளாதார ஆற்றல் மேம்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 19.3.2020 அன்று சட்டப்பேரவை விதி எண் 110ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், 2019-20ஆம் ஆண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு என இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, 13 ஆயிரத்து 301 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, 2020-21ஆம் ஆண்டு 14 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று அறிவித்தார்கள். ஆனால், அந்த இலக்கினையும் கடந்து இதுவரையில் 15,653.04 கோடி ரூபாய் வங்கிக்கடன் தொகை 3,82,121 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை, கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் தொகையினைவிட அதிகமானதாகும். மேலும், கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 48,737.40 கோடி ரூபாய் கடனுதவியாக வங்கிகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் நலம் நாடும் நம் தமிழக அரசால் 2011ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு காலத்திற்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 81,582.65 கோடி ரூபாய் வங்கிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

04.02.2021 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மட்டும், 20,186 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 1,083.96 கோடி ரூபாய் மற்றும் 317 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கு 277.79 கோடி ரூபாய் என மொத்தம் 1,361.75 கோடி ரூபாய் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் சுய உதவி குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள பழங்குடியினர் பண்பாட்டு மையத்தில் 08.02.2021 அன்று நடைபெற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் கலந்து கொண்டு, 18 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.1.18 கோடி கடனுதவி மற்றும் அம்மா இருசக்கர வாகனத் திட்டத்தின் கீழ் பணிக்கு செல்லும் 126 மகளிருக்கு தலா ரூ.25,000/- மானியம் என மொத்தம் ரூ.3.15 கோடி மதிப்பிலான உதவிகளை வழங்கினார்.

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நீலகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. பாபு, நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் மகளிர் திட்டம் ஆகியவற்றின் உதவித் திட்ட அலுவலர்கள், பல்வேறு துறை அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல்

மதுரை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் சுய உதவிக் குழுக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி 11.01.2021 அன்று நடைபெற்றது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜூ அவர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, 14 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.55.60 இலட்சம் வங்கிக் கடன் இணைப்பு, 120 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.12 இலட்சம் மற்றும் பிரதம மந்திரியின் ஆத்மநிர்பார் திட்டத்தின் கீழ் 737 தெருவோர வியாபாரிகளுக்கு ரூ. 7.37 இலட்சம் வங்கிக் கடனுதவி மற்றும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் பொங்கல் வாழ்த்து மடல் ஆகியவற்றை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. டி. அன்பழகன், இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை கூடுதல் இயக்குநர் / மதுரை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. எம். பிரபாகர், உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் 500க்கும் மேற்பட்ட சுய உதவிக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்குதல்

விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் விழுப்புரம் அரசு சட்டக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் பணிபுரியும் பெண்களுக்கு மானிய விலையில், அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் 35 மகளிருக்கு ரூ.6.25 இலட்சம் மதிப்பீட்டில் அம்மா இருசக்கர வாகனங்களை மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள் மற்றும் கனிமவளத்துறை அமைச்சர் திரு. சி. வி. சண்முகம் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் விழுப்புரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஆ. அண்ணாதுரை, இ.ஆ.ப., கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திருமதி ஸ்ரேயா பி. சிங், இ.ஆ.ப.. சட்டமன்ற உறுப்பினர் திரு. எம். ஆர். முத்தமிழ்ச்செல்வன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் இயக்குநர் / விழுப்புரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வெ. மகேந்திரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சுய உதவிக் குழுக்கள் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி

தூத்துக்குடி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் ஆகியவற்றின் சார்பில் தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நேஷனல் பொறியியல் கல்லூரியில் மாபெரும் தனியார் வேலைவாய்ப்பு முகாம் 29.01.2021 அன்று நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கி. செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜீ அவர்கள் வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இம்முகாமில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த கோவில்பட்டி ஊராட்சியைச் சேர்ந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்களை மாண்புமிகு அமைச்சர் அவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் பார்வையிட்டு பொருட்கள் குறித்த விபரங்களைக் கேட்டறிந்தனர். இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார மேலாளர், சமுதாய ஒருங்கிணைப்பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிப் பெருங்கடன் வழங்குதல்

வேலூர் மாவட்டத்தில் அரசின் பல்வேறு துறைகளின் சார்பாக பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. கே. சி. வீரமணி அவர்கள் கலந்து கொண்டு அனைத்துத் துறை சார்பாக பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கியதுடன், ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் 142 சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.5.91 கோடி வங்கிக் கடன் இணைப்பும், 75 பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகன மானியமாக ரூ.18,75,000/-மும் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்து மடல்கள் வழங்குதல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்து மடல்களை 12.01.2021 அன்று ஆரணி வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலைய துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை மாவட்ட உதவி ஆட்சியர், திருவண்ணாமலை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி ப. சந்திரா, உதவித் திட்ட அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்பு

கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு 09.02.2021 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் கொத்தடிமை தொழிலாளர் முறை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

குடியரசு தின விழா கொண்டாட்டம்

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 26.01.2021 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சார்பாக 72வது குடியரசு தின விழா கொண்டாடப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் தேசியக் கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து தீனதயாள் உபாத்யாய கிராமின் கௌசல்யா யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் திறன் பயிற்சி பெற்றவர்களுக்கு பல்வேறு நிறுவனங்களில் பணி நியமன ஆணைகளையும் மேலாண்மை இயக்குநர் அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்ட பாராளுமன்ற நிலைக் குழு

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்திட மத்திய பாராளுமன்ற நிலைக்குழு *(Parliamentary Standing Committee)* உறுப்பினர்கள் தமிழகம் வருகை தந்தனர். ஆய்வின் ஒருபகுதியாக 18.01.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், சிங்கபெருமாள் கோயில் ஊராட்சியில் உள்ள *RURBAN* கட்டிடத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களின் கண்காட்சி, *RSETI* நிறுவனம் மூலம் நடைபெறும் பயிற்சிகள் போன்றவற்றைப் பார்வையிட்டனர்.

தொடர்ந்து தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன்

இணைப்பிற்கானகாசோலைகளை மத்திய பாராளுமன்ற நிலைக்குழு தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர்கள் திரு. ஜா. சம்பத், திரு. ஜே. கணேஷ் கண்ணா, திருமதி. கே. சுமதி, திரு. எஸ். சாமுவேல் இன்பத்துரை, இணை இயக்குநர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சீனிவாசராவ், பல்வேறு துறை அரசு அலுவலர்கள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

வாக்காளர் தின உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி

தேசிய வாக்காளர் தினத்தை முன்னிட்டு, 25.01.2021 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் வாக்காளர் தின உறுதிமொழி ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 26.01.2021 அன்று நடைபெற்ற குடியரசு தின விழா நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பாக, பூமணம், ஸ்ரீ பாலா சரஸ்வதி, கங்கையம்மன் மற்றும் முல்லை ஆகிய நான்கு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.37.50 இலட்சம் மதிப்பிலான வங்கி கடன் இணைப்பு காசோலைகளை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி. மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சீனிவாசராவ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மற்றும் மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மீன் மேலாண்மை பயிற்சி

தூத்துக்குடி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் கடலோர பகுதி வட்டாரங்களைச் சேர்ந்த ஊரக இளைஞர்களுக்கு தீனதயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் தூத்துக்குடி RSETI மூலம் மீன் மேலாண்மை (Matsys Mitra) குறித்து 60 நாட்கள் தங்கும் வசதியுடன் கூடிய சுய வேலை வாய்ப்பு பயிற்சி 25.01.2021 அன்று மத்திய அரசால் இணையதளம் வழியாக துவங்கப்பட்டது. இதில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கி. செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் இணையதளம் வழியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி பி. ஜே. ரேவதி, தீனதயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா திட்டத்தின் மாநில திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், RSETI (சென்னை) இயக்குநர் திரு. ஜி. ரெங்கராஜன், தூத்துக்குடி மாவட்ட முன்னோடி வங்கி மேலாளரின் சார்பாக திரு. விஜயகுமார், மீன்வளக் கல்லூரி பேராசிரியர்கள், மீன்வளத் துறை இணை இயக்குநர், தமிழ்நாடு மீன்பிடி மேம்பாட்டு கழகத்தின் அலுவலர்கள், தூத்துக்குடி RSETI இயக்குநர் திரு. துரைசாமி, மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு. அ. பிரபாகர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு வங்கிப் பெருங்கடன்

வேலூர் மாவட்டத்தில் நடைபெற்ற 72வது குடியரசு தின விழா நிகழ்ச்சியின்போது, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் காட்பாடி ஊராட்சி ஒன்றியம், வெப்பாளை ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பிற்கு ரூ. 50,00,000/- வங்கி பெருங்கடனும், விண்ணம்பள்ளி வெங்கடேஷ்வரா மகளிர் சுய உதவிக் குழுவிற்கு ரூ. 12,75,000/- வங்கி கடனும், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன திட்டத்தின் கீழ் 55 பயனாளிகளுக்கு இருசக்கர வாகனங்களையும் வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. அ. சண்முகசுந்தரம், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இவ்விழாவில் காவல்துறை துணைத் தலைவர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்து மடல்கள் வழங்குதல்

தஞ்சாவூர் மாவட்டம்

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்து மடல்களை தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம. கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. சு. கதிரேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஆ. பழனி, உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுவினர் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை மாவட்டம்

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்து மடல்கள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பி. உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்களால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின்போது புதுக்கோட்டை மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி அ. லலிதா மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

விருதுநகர் மாவட்டம்

விருதுநகர் மாவட்டத்தில் உள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்து மடல்களை விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. இரா. கண்ணன், இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார். உடன் விருதுநகர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கோ. குருநாதன், மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கில புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்களை தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். கி. செந்தில் ராஜ், இ.ஆ.ப., அவர்கள் 11.01.2021 அன்று சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் திரு. விஷ்ணுசந்திரன், இ.ஆ.ப., மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் திருமதி. பி.ஜே.ரேவதி மற்றும் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கில புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்களை, நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் 11.01.2021 அன்று சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி கெட்சி லீமா அமலினி, மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. பாபு உட்பட அரசுத்துறை அலுவலர்கள், சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை மாவட்டம்

சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் 12.01.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கில புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்கள் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் இயக்குநர் திரு. ஜா. சம்பத் அவர்கள் மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வழங்கினார்.

இந்நிகழ்வின்போது கூடுதல் இயக்குநர்கள் திரு. ஜே. கணேஷ்கண்ணா, திருமதி. கே. சுமதி, திரு. எஸ். சாமுவேல் இன்பத்துரை, இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் DDU-GKY திட்டங்களின் செயல்திறன் குறித்த ஆய்வுக்குழு கூட்டம்

தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் DDU-GKY திட்டங்களின் செயல்திறன் குறித்த ஆய்வுக்குழு கூட்டம் 03.02.2021 அன்று சென்னை, அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் தலைமையகத்தில் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில் தேசிய ஊரக வாழ்வாதார இயக்கம் மற்றும் DDU-GKY திட்டங்களின் செயல்பாடுகள், முன்னேற்றங்கள் மற்றும் சாதனைகள் குறித்து காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்களின் தலைமையில் கூடுதல் இயக்குநர்கள், பொது மேலாளர், இணை இயக்குநர்கள் மற்றும் அலுவலர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சுய உதவிக் குழுக்களின் தொழில் நடவடிக்கைகள் பார்வையிடல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் சுய உதவிக் குழுக்கள் மேற்கொண்டு வரும் தொழில் நடவடிக்கைகளை 20.01.2021 அன்று கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம். அரவிந்த், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

குருந்தன்கோடு வட்டாரத்திற்குட்பட்ட வெள்ளிச்சந்தை ஊராட்சிக்குட்பட்ட வான்முகில் சுயஉதவிக் குழுவின் முகக்கவசம் மற்றும் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் தொழில் அலகு, கக்கோட்டுத்தலை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு நடத்தி வரும் தையல் பயிற்சி மையம், மேலசங்கரன்குழி ஊராட்சியில் விநாயகா மகளிர் சுய உதவிக் குழுவினர் செய்து வரும் மண்பாண்டம் தொழில் மற்றும் நாகர்கோவில் மாநகராட்சி பகுதிக்குட்பட்ட மிஸ்பா மகளிர் சுய உதவிக் குழு செய்து வரும் ஊறுகாய் தயாரித்தல் தொழில் ஆகியவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பார்வையிடப்பட்டது.

இந்த ஆய்வின் போது கன்னியாகுமரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. வே. பிச்சை அவர்கள், உதவி திட்ட அலுவலர்கள் மற்றும் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

ஒரு சொல் கேளீர்...

பேசும் கலை...!

பேசும் கலை...!

சகோதரிகளுக்கு வணக்கம்.

ஒவ்வொரு மாதமும் உங்களுடன் வேறுபட்ட தலைப்புகளின் கீழ் பேசுவதாக தெரிவித்திருந்தேன். இம்முறை நாம் 'பேசும் கலை' குறித்து பேசலாம். சுய உதவிக் குழு சகோதரிகளாகிய நீங்கள் வங்கிகள், அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு அடிக்கடி நேரில் சென்று உங்களது கோரிக்கைகளை முன்வைத்து பேச வேண்டியுள்ளது. நீங்கள் எங்கு சென்றாலும் ஒரே வண்ணத்தில் ஆடை அணிந்து கொண்டு, அணியாகச் சென்று உங்களது பணிகளை ஆற்றி வருவது கண்ணே பட்டு விடும் கண்கொள்ளா அழகு. உடுத்தியிருக்கும் உடையே உங்களின் ஒற்றுமையை உணர வைக்கும். அலுவலகங்களுக்கோ அல்லது வங்கிகளுக்கோ குழுவாகச் சென்று உங்களது கோரிக்கைகளை எடுத்துரைக்கும்போது எப்படி பேச வேண்டும் என்பது குறித்து இந்த அன்பு சகோதரியின் அனுபவம் சார்ந்த சில கருத்துக்களை முன்வைக்க விழைகிறேன்.

அதிகாரிகளிடமும் அலுவலர்களிடமும் பேச வேண்டிய பொருள் குறித்து முன்னதாகவே உங்களுக்குள் விவாதித்துக் கொள்ள வேண்டும். உங்களின் சார்பாக யார் பேசுவது என்பது குறித்து முதலிலேயே ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். பணிவான, கனிவான உடல்மொழியோடு பேசும் பழக்கமுள்ள ஒரு சகோதரியை நீங்கள் முன் நிறுத்தலாம். அவர் உங்களது கோரிக்கையை தெளிவான வார்த்தைகளோடு இயல்பான வகையில், ஆனால் தன்னம்பிக்கையோடு எடுத்துரைக்க வேண்டும். உடன் வந்தவர்கள்கூட நிச்சயம் தங்கள் கருத்துக்களைச் சொல்லலாம். ஆனால், ஒருபொழுதும் ஒரே நேரத்தில் பலர் பேசக்கூடாது. அப்படி கூட்டாக பேசினால் யாரிடம் பேசுகிறோமோ அவருக்கு ஒன்றுமே புரியாது போகலாம். நாம் எடுத்துரைக்கும் கருத்தின் தாக்கமும், ஆக்கமும் அவரைச் சென்றடையாத நிலையும் நேரலாம். எனவே, ஒருவர் பேசி முடித்த பின்னரே மற்றொருவர் பேச வேண்டும்.

தெளிவான அறிமுகம் மிகவும் அவசியம். சந்திப்பின் நோக்கத்தை தெரிவிப்பதும் முக்கியம். யாரிடம் பேசப் போகிறோம் என்பது குறித்து முன்னதாகவே விரிவாக தெரிந்து கொண்டு, அவரது நிலைக்குரிய மரியாதையை தவறாது தந்து விட வேண்டும். பேசும் போதே முகத்தைச் சுழிப்பது, எங்கேயோ பார்த்துக் கொண்டு பேசுவது, காலை ஆட்டுவது, அடிக்கடி உடையை சரி செய்து கொள்வது போன்றவைகளைத் தவிர்க்க வேண்டும்.

சொல்ல வேண்டிய விவரங்களை ஆற்றொழுக்கான மொழியில் எதிர்தரப்பினரின் கண்களைப் பார்த்துப் பேச வேண்டும். அவர் கேட்கும் கேள்விக்கும் தெளிவாக பதிலுரைக்க வேண்டும். மனு ஏதாவது

எழுதிச் சென்றிருந்தால், அதனை உரிய முறையில் உறையில் இட்டு மரியாதையாக வழங்க வேண்டும். அவர் மிக உயர் அதிகாரியாக இருந்தால், மனு பெறப்பட்டதற்கான அத்தாட்சியை அவரிடமே கேட்கக் கூடாது. அவரது காரியதரிசியிடம் அத்தாட்சியை கேட்டுப் பெறலாம். மனு கொடுத்தபின் அடுத்து எப்போது வர வேண்டும் என்று அவரிடமே கேட்பதோ, வர வேண்டிய நாளை நீங்களே முடிவு செய்து தெரிவிப்பதோ கூடாது.

சொன்ன செய்தியையே திரும்பத் திரும்ப சொல்லக்கூடாது. உங்கள் குழுவில் ஒருவர் ஒரு விஷயத்தைச் சொல்லிவிட்டால் அதையே மீண்டும் இன்னொருவர் விளக்கக்கூடாது. பொதுவான காரியத்திற்காக சென்றிருக்கும்போது குழுவில் ஒருவர் தனது சொந்த காரியத்தை முன் வைத்து பேசக்கூடாது. அது சுயநலமாக கொள்ளப்படலாம். கூட்டு நோக்கத்திற்கு குறையும் வரலாம். கோரிக்கையை வைத்த பின்னர் கட்டாயம் நன்றி தெரிவிக்க வேண்டும்.

பொது விஷயங்களைப் பேசும்போது கோபப்படுதலோ, கூக்குரல் இடுதலோ நிச்சயம் கூடாது. கூக்குரல் இடுதல் நாகரீகத்தின் வெளிப்பாடாகாது. அலுவலகத்தில் பணியாற்றும் பிறரைப்பற்றி குறை சொல்லக்கூடாது. உண்மைகளை எடுத்துரைக்கலாம். ஆனால் அதிகப்படுத்துதல் கூடாது. ஓர் அலுவலரின் முந்தைய அலுவலர் குறித்து பாராட்டோ, குறையோ சொல்லக் கூடாது. தேவைக்கு அதிகமான பாராட்டுதல் எதிர்வினையாற்றலாம். அதிகாரியைப் பார்க்கச் செல்லும்பொழுது காத்திருக்க வேண்டி இருந்தால் அமைதியாக இருக்க வேண்டும். சத்தமாகப் பேசிக் கொண்டு தங்களது இருப்பை காட்டிக் கொள்ளக் கூடாது.

நீங்கள் சந்திக்க வேண்டியவர் ஒரு பெண் அதிகாரியாக இருந்தால், அவர் அந்த அலுவலகத்தின் அதிகாரி என்பது மட்டுமே உங்கள் கண்களுக்கு தெரிய வேண்டும். சாதாரணமாக ஆண்கள் ஒரு பெண் அதிகாரியை முதலில் அதிகாரியாகப் பார்க்கிறார்கள். அதன் பின்னர்தான் பெண் அதிகாரி என்று உணர்கிறார்கள். ஆனால் பெண்களோ ஒரு பெண் அதிகாரியை முதலில் பெண்ணாகப் பார்க்கிறார்கள். அதன் பின்னர்தான் அதிகாரி என்பதை உணர்கிறார்கள். இந்த உணர்வானது அந்த பெண் அதிகாரிக்கு பெண்களால் தரப்பட வேண்டிய மரியாதையை சற்றே மட்டுப்படுத்துகிறது. எனவே அதிகாரிகள் என்பார் ஆணாக இருந்தாலும் பெண்ணாக இருந்தாலும் சரிசமமே என்றுணர்ந்து அவர்களுக்குரிய மரியாதையைத் தவறாது தர வேண்டும். அணுகப்படும் அதிகாரி பெண்ணாக இருந்தால், அவரிடம் மிக அருகில் சென்று பேசுவது, அவரைத் தொட்டுப் பேசுவது போன்றவைகளை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

அலுவலர்களை சந்திக்கும் பொழுது அவர்கள் முன்பாகவே உங்களுக்கு இடையேயான கருத்து வேறுபாடுகளை பேசி தீர்த்துக் கொள்ள முனையக் கூடாது. அது நீங்கள் சென்றிருக்கும் நோக்கத்தை வலுவிழக்க வைக்கும். உங்களின் ஒற்றுமைதான் அதுவும் வெளிப்படையாகத் தெரியும் ஒற்றுமைதான் உங்களது கோரிக்கையை வலுவாக்கும் என்பதை அறிவோம்.

இன்றைய சமூகத்தில் சுய உதவிக் குழு பெண்களுக்கென்று ஒரு தனி மரியாதை வந்து விட்டிருக்கிறது. இந்த மரியாதையை ஒற்றுமை உணர்வுடன் கூடிய சொல் மற்றும் செயல்பாடுகளின் மூலமாகவே தக்க வைத்துக் கொள்ள முடியும். அடுத்த கட்டத்திற்கு நாம் தயாராகவும் முடியும். எனவே வீட்டை விட்டு வெளியே வந்து தன்னுடைய மற்றும் தனது குழு உறுப்பினர்களது குடும்பத்தின் மேம்பாட்டுக்காக அயராது பாடுபட்டுவரும் பெண்களாகிய நீங்கள் இந்த கருத்துக்களை மனதில் கொண்டு, பேசும் கலையில் உங்களை மேலும் மெருகேற்றிக் கொண்டு வெற்றி பல காணவும், வீறு நடை பயிலவும் அன்போடு அழைக்கிறேன்.

பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப.,

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
சென்னை.

பேசும் கலை!

காஞ்சிபுரம் மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆங்கில புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் நல்வாழ்த்து மடல்களை காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. சீனிவாசராவ் அவர்கள் சுய உதவி குழுக்களின் உறுப்பினர்களுக்கு வழங்கினார். இந்நிகழ்ச்சியில் உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் சுய உதவி குழுக்களின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்டம்

தேசிய பெண் குழந்தைகள் தினம்

சேலம் மாவட்டம், அயோத்தியாப்பட்டிணம் ஒன்றியத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் உடையாப்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சார்பில் தேசிய பெண் குழந்தைகள் தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் உடையாப்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு, “பெண் குழந்தைகளைக் காப்போம்... பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம்...” என்ற உறுதிமொழியினை ஏற்றுக் கொண்டனர்.

புதிதாய் வருவாய் புத்தாண்டே...!

புதிதாய் வருவாய் புத்தாண்டே....!
புன்னகை மலர புது ஒளி மின்ன
நதியலைத் துள்ளல் நடையினில் மிளிர
புதிதாய் வருவாய் புத்தாண்டே....!

கொரோனா பிடியில் சிக்கித் தவித்து,
மரணத்தின் வாயிலில் பலரை இழந்து,
தொழிலும் வளமும் மிகவும் நலிந்து
சென்றது துன்பத்தில் கடந்தாண்டு...

தொடரட்டும் இன்பங்கள் இந்தாண்டு;
வளரட்டும் செல்வங்கள் எங்கெங்கும்;
மலரட்டும் இனிய சமுதாயம் – நன்மை
விளங்கட்டும் உலகில் என்றென்றும்...!

மகளிர் குழுக்கள் ஒன்றிணைந்து
வாழ்வில் உயரும் வழியறிந்து
தொழில் வளம் பொருள் வளம் அடைவதற்கே
உதவிட வருவாய் புத்தாண்டே....!
உயர்த்தி வைப்பாய் புத்தாண்டே....!!

ஜா. சம்பத்,
கூடுதல் இயக்குநர் (திறன் வளர்ப்பு)
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்
TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION
Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு

தமிழகத்தில் மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் செயல்பாடுகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்திட பாராளுமன்ற நிலைக்குழுவின் தலைவர் அய்யா திரு. ஜகதாம்பிகா பால் அவர்கள் மற்றும் பாராளுமன்ற நிலைக்குழு உறுப்பினர்கள் அரசுமுறைப் பயணமாக 20.01.2021 அன்று தமிழகத்திற்கு வருகை தந்து, தமிழகத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்களின் செயல்பாடுகளைப் பார்வையிட்டதுடன், மத்திய அரசின் பங்களிப்புடன் செயல்படுத்தப்படுகின்ற அனைத்துத் திட்டங்களையும் விரிவாக ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள், அனைத்துத் துறை செயலாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் வங்கியாளர்கள் கலந்து கொண்டு அனைத்துத் திட்டச் செயல்பாடுகள் குறித்தும் பாராளுமன்ற நிலைக்குழுவின் உறுப்பினர்களுக்கு விரிவாக விளக்கிக் கூறினர்.

மேற்படி ஆய்வின் ஒருபகுதியாக தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் மற்றும் பிரதம மந்திரியின் தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்புத் திட்டம் (PM-SVANidhi) ஆகியவை பாராளுமன்ற நிலைக்குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டன.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்டச் செயல்பாடுகள் குறித்து பாராளுமன்ற நிலைக்குழுவினருக்கு விளக்கிக் கூறினார். தொடர்ந்து தெருவோர வியாபாரிகளுக்கான சுய சார்புத் திட்டம் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 1,90,813 விண்ணப்பங்கள் பதிவுவேற்றம் செய்யப்பட்டதில், 54,406 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, 30,387 தெருவோர வியாபாரிகளுக்கு தலா ரூ. 10,000/- வீதம் கடனுதவி வழங்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

சுய உதவிக் குழுக்கள்
உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி

திருவண்ணாமலை மாவட்டத்தில் TNULM - TNSRLM திட்டங்களின் கீழ் தொடங்கப்பட்ட சுய உதவிக் குழுக்கள் மூலம் முற்றிலும் இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட பொருட்களின் கண்காட்சியினை தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு, கண்காட்சியில் பங்கேற்ற சுய உதவிக் குழுக்களுக்கு பாராட்டுகளை தெரிவித்தார்.

தொடர்ந்து திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள தேனிமலை பகுதியில் அமைந்துள்ள நகர்ப்புற வாழ்வாதார மையத்தினை பார்வையிட்ட செயல் இயக்குநர் அவர்கள், சமுதாய வளப் பயிற்றுநர்களுடன் கலந்துரையாடி, அவர்களை சிறப்பாக செயல்படும்படி வாழ்த்தினார்.

பின்னர் திருவண்ணாமலை காமராஜர் சிலை அருகில் உள்ள தெருவோர வியாபாரிகளை செயல் இயக்குநர் அவர்கள் நேரடியாக சந்தித்து அவர்களின் நலன் குறித்து பேசியதுடன், தெருவோர வியாபாரிகள் அமைத்து உள்ள CIG குழுக்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

தமிழ்நாடு மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர் முனைவர் ஜெ. யு. சந்திரகலா, இ.ஆ.ப., அவர்கள் 29.01.2021 அன்று கோவை மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் திட்டப் பணிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வில் இணை இயக்குநர் திருமதி. எஸ். பாரிஜாதம், கோயம்புத்தூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கு. செல்வராசு, உதவித் திட்ட அலுவலர்கள் மற்றும் சமுதாய அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

ஆய்வுக் கூட்டத்தினை தொடர்ந்து செயல் இயக்குநர் அவர்கள் பூமாலை வணிக வளாகத்தில் அமைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் கடைகளைப் பார்வையிட்டு, அங்குள்ள சுய உதவிக் குழுவினரிடம் பொருட்களின் தரம் மற்றும் விற்பனை குறித்த விபரங்களைக் கேட்டறிந்து மேலும் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளை வழங்கினார்.

பெரம்பலூர் மாவட்டம்

துணிப்பை மற்றும் சணல் பை தயாரிக்கும் இணைந்த கரங்கள் மகளிர் சுய உதவிக் குழு

பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் செயல்படும் இணைந்த கரங்கள் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தங்கள் குழுவின் வெற்றி குறித்து கூறும்போது, “எங்கள் குழுவில் 15 உறுப்பினர்கள் உள்ளனர். குழுவின் சார்பில் சுய தொழில் மேற்கொள்ள விரும்பிய நாங்கள் பெரம்பலூர் மாவட்ட தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம், துணிப்பை மற்றும் சணல்பை தயாரிக்கும் பயிற்சி பெற்றோம். மேலும் மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்தின் மூலம் பெரம்பலூர் மாவட்ட நகராட்சி பூமாலை வணிக வளாகத்தில் குறைந்த வாடகையில் கடை ஒன்று வழங்கப்பட்டது.

சுய தொழில் மேற்கொள்ள தேவையான மூலதனத்திற்காக பெரம்பலூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் மூலம் ரூ.1,50,000/- கடனாக பெற்றோம். மேலும் தனிநபர் தொழில் கடனாக இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் ரூ.55,000/- பெற்றோம். அத்தொகையை கொண்டு அச்சிடப்பட்ட துணிப்பைகள் தயாரிப்பதற்கான மூலப்பொருட்களான காடாத் துணிகளை திருப்பூர் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் மொத்த விலையில் வாங்கி நேர்த்தியாகவும், தரமாகவும் துணிப்பைகளை தயாரித்து பை ஒன்று ரூ.10/- விலையில் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் உள்ள கடைகளின் மூலம் விற்பனை செய்து வருகின்றோம். இத்தொழில் மூலம் எங்கள் குழுவின் உறுப்பினர்களுக்கு மாதந்தோறும் கணிசமான வருவாய் கிடைக்கிறது. மேலும் சிறந்த தொழில் முனைவோருக்கான விருது மகளிர் திட்டம் மற்றும் *RSETI* மூலம் எங்கள் குழுவிற்கு வழங்கப்பட்டது.

இத்தொழில் மூலம் கிடைக்கும் வருவாயினைக் கொண்டு வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தவணைகளையும் தவறாமல் செலுத்தி வருகிறோம். துணிப்பைகள் தயாரிப்பது குறித்து பிற சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கும் பயிற்சிகள் வழங்கி வருகின்றோம். எங்களின் முயற்சி நிச்சயமாக வெற்றி பெற்று, எங்கள் வாழ்க்கை தரம் உயரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எங்களின் வளர்ச்சிக்கு பெரிதும் உதவி வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்கள் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்” என்று குறிப்பிட்டனர்.

திருப்பத்தூர் மாவட்டம்

வாழ்நாள் கனவை நினைவாக்கிய இயக்கம்

திருப்பத்தூர் நகராட்சி, ரெட்டை மலை சீனிவாசன் பேட்டை பகுதியில் செயல்படும் கோல்டன் மகளிர் மன்றத்தின் உறுப்பினர்களில் நான்கு நபர்கள் ஒன்றிணைந்து தங்களின் வாழ்நாள் கனவை நனவாக்கி வெற்றி கண்டுள்ளனர்.

இக்குழுவினர் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சுய உதவிக் குழுவைத் துவக்கி, சேமிப்பு மற்றும் தொழில் துவங்க ஆலோசனை பெற்றனர். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் இலவசமாக பயிற்சியினைப் பெற்றனர். தொடர்ந்து இந்தியன் வங்கி மைக்ரோசாட் கிளை மூலம் ரூ.7,50.000/- கடன் பெற்று, அந்தத் தொகையை முதலீடாகக் கொண்டு டைலரிங் யூனிட் துவங்கி, மாதந்தோறும் ரூ.6,500/- வரை நிலையான வருவாய் பெற்று தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி வருகின்றனர். தங்களுக்கு பயிற்சி வழங்கி, தொழில் செய்திட ஊக்கம் அளித்து, வங்கிக் கடன் பெற்றிட வழிகாட்டி, தங்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தி, தங்களுக்கு தன்னம்பிக்கை ஏற்படுத்திக் கொடுத்துள்ள தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு கோல்டன் மகளிர் மன்றத்தின் உறுப்பினர்கள் தங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

ஈரோடு மாவட்டம்

வழிகாட்டிய வாழ்வாதார இயக்கத்திற்கு நன்றி

ஈரோடு மாவட்டம், வாணிப்புத்தூர் பேரூராட்சியில் செயல்படும் ஓம்ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் சுய தொழில் துவங்கி தற்போது பொருளாதார வளர்ச்சி பெற்று வருகின்றனர்.

இக்குழுவின் உறுப்பினரான ஸ்ரீதேவி (க.பெ. வெங்கடேஸ்வரா பாபுஜி) கூறும்போது, "கடந்த இரண்டு வருடங்களுக்கு முன், என் வாழ்வாதாரம் வறுமை கோட்டிற்குக் கீழ் இருந்தது. நான் வசிக்கும் இடத்தின் அருகில் உள்ள ஏழை மகளிரை ஒன்றிணைத்து, ஓம் ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவினை துவக்கி, எங்கள் பகுதியில் உள்ள தமிழ்நாடு கிராம வங்கியில் சேமிப்புக் கணக்கு துவங்கி சேமிக்கத் துவங்கினோம்.

எங்கள் குழுவில் உள்கடனாக ரூ.20,000/- பெற்ற நான் கற்றாழை சோப்பு, மூலிகை எண்ணெய் ஆகியவற்றை தயாரித்து விற்பனை செய்து அதன் முலம் மாதந்தோறும் கணிசமான வருவாய் பெற்று வருகிறேன். எங்கள் குழுவின் உறுப்பினரான புஷ்பா என்பவர் உள்கடன் பெற்று, அதன் மூலம் இரண்டு ஆடுகள் வாங்கி, வருவாய் பெற்று அவருடைய வாழ்வாதாரத்தை உயர்த்தி உள்ளார். மற்றொரு உறுப்பினரான மாசிலாமணி என்பவர் தான் குழுவில் பெற்ற உள்கடன் தொகையினைக் கொண்டு, இரண்டு மாடுகளை வாங்கி அதன் மூலம் வருவாய் பெற்று வருகிறார்.

மேலும் பச்சியம்மாள் என்ற உறுப்பினர் குழுவின் உள்கடன் பெற்று, அந்தத் தொகையைக் கொண்டு, இரண்டு ஆடுகளை வாங்கி வளர்த்து கணிசமான வருவாய் பெற்று வருகிறார். தற்போது தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் வாணிப்புத்தூர் பேரூராட்சியில் எங்களின் ஓம் ஸ்ரீ அம்மன் மகளிர் சுய உதவிக் குழுவின் மூலம் திருமண மண்டபம் கட்டும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றோம்.

எங்களுக்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்கள் குழுவின் உறுப்பினர்கள் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டார்.

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY)

DDU-GKY திட்டத்தின் கீழ் இளைஞர்களை அணிதிரட்டும் முகாம்

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்தின் கீழ் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் இளைஞர்களை ஒருங்கிணைக்கும் பணியை துரிதப்படுத்தும் வகையில் 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் பிரத்யேகமாக பெருவாரியான அணிதிரட்டுதல் மாதம் (Mass Mobilisation Month) ஆக கடைப்பிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி 11.02.2021 முதல் 22.02.2021 வரை தொடர்ந்து 10 நாட்களுக்கு இச்சிறப்பு முகாம் நடத்தப்பட்டது. நான்கு மண்டலங்களாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு தினசரி மண்டலத்திற்கு ஒரு மாவட்டம் வீதம் நான்கு மாவட்டங்களில் இம்முகாம் நடைபெற்றது. DDU-GKY திட்டத்தின் 140க்கும் மேற்பட்ட திட்ட செயலாக்க முகமைகள் இம்முகாமில் கலந்து கொண்டு தங்கள் பயிற்சிக்கு மையத்திற்குத் தேவையான இளைஞர்களை அவர்களின் விருப்பத்தின் பேரில் தேர்வு செய்து, பயிற்சி பெற்று வருகின்றனர். மாவட்டத்திற்கு தலா 150 இளைஞர்கள் வீதம் தேர்வு செய்யப்பட்ட இளைஞர்களுக்கு DDU-GKY திட்டத்தின் கீழ் திறன் வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். DDU-GKY முதன்மை இயக்குநர் அலுவலர் திரு. ஜே. கணேஷ் கண்ணா, இணை இயக்குநர் திருமதி என். கவிதப்பிரியா, மாநில திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், CTSA திட்ட மேலாளர் திரு. சந்தோஷ், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. முரளி, திரு. சம்பத் மற்றும் மாவட்ட அளவில் திட்ட இயக்குநர்கள், உதவித் திட்ட அலுவலர்கள் இம்முகாம் சிறப்பாக நடைபெறுவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்.

மத்திய ஊரக அமைச்சகத்தின் மூலம் DDU-GKY மற்றும் RUDSETI பணிகள் ஆய்வு

மத்திய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் இணைச்செயலர் (திறன் பிரிவு) திருமதி. லீனா ஜோரி, இ.ஆ.ப., மற்றும் இயக்குநர் திரு. விரேந்திர சர்மா ஆகியோர் 29.01.2021 அன்று மதுரை மாவட்டத்தில் செயல்பட்டு வரும் DDU-GKY மற்றும் RUDSETI பயிற்சி மையங்களைப் பார்வையிட்டு ஆலோசனைகளை வழங்கினர்.

முன்னதாக GPR பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் நடைபெற்ற DDU-GKY பயிற்சி வகுப்புகளை பார்வையிட்டு, அங்குள்ள பயிற்சியாளர்களிடம் பயிற்சி குறித்து கேட்டறிந்தனர். அங்கு நடைபெற்ற பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்வில், Apollo Med Skills, NRD டிரஸ்ட் மற்றும் எமிரேட்ஸ் ஓவர்சீஸ் ஆகிய நிறுவனங்கள் மூலம் DDU-GKY திட்டத்தில் பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டது. குறிப்பாக எமிரேட்ஸ் ஓவர்சீஸ் நிறுவனத்தின் மூலம் 3 நபர்களுக்கு ரூ.36,000/- மாத ஊதியத்தில் கத்தார் நாட்டில் பணிபுரிவதற்கான ஒப்புதல் கடிதம் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து, மதுரை மாவட்ட கனரா வங்கி RUDSETI நிறுவனத்தில் நடைபெற்று வரும் அழகுக்கலை மற்றும் இருசக்கர வாகன பராமரிப்பு ஆகிய பயிற்சிகளை பார்வையிட்டனர். குறிப்பாக இணைச்செயலர் அவர்கள் பேசும்போது, RUDSETI மூலம் பயிற்சி முடித்த பயனாளிகளுக்கு வங்கிக் கடன் வழங்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்' என அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் DDU-GKY முதன்மை இயக்கு அலுவலர் திரு. ஜே. கணேஷ் கண்ணா, மதுரை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் இயக்குநர் திரு. எம். பிரபாகர், DDU-GKY மாநில திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், கனரா வங்கி கோட்ட மேலாளர் திரு. மாதவராஜ், மதுரை மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு.கே.அறிவழகன், RUDSETI இயக்குநர் திரு.ரவிக்குமார் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

தீன்தயாள் உபாத்யாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU-GKY) திட்டத்திற்கு சர்வதேச தரக் கட்டுப்பாட்டு நிறுவன ISO - 9001:2015 தரச் சான்று

உலகளவில் ஸ்விட்சர்லாந்து நாட்டை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் ISO 9001:2015 நிறுவனம் சர்வதேச அளவில் வியாபார/சேவை என பல தரப்பட்ட நிறுவனங்களை தர ஆய்வு செய்து, தர நிர்ணய சான்று அளித்து வருவதுடன், அத்தகைய நிறுவனங்கள் உலகளாவிய தரத்துடன் தொடர்ந்து செயல்படுவதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கும், நுகர்வோர்களுக்கும் தரமான பொருட்கள்/ சேவைகள் கிடைக்க வழிவகை செய்கிறது.

இதன் அடிப்படையில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் DDU-GKY திட்டத்தை தர ஆய்வு செய்து, ISO 9001:2015 சான்று வழங்கியுள்ளது. DDU-GKY திட்டத்தின் கீழ் திட்ட செயலாக்க நிறுவனங்களின் தேர்வு முறை, பயிற்சி நிறுவனங்களின் கண்காணிப்பு, இளைஞர்களுக்கு பணி வாய்ப்பு வழங்குதல், திறன் வளர்ப்பு, IEC பணிகள், வெளிப்படைத்தன்மை ஆகிய பல்வேறு நிலைகளில் பின்பற்றப்படும் வழிமுறைகளை ஆய்வு செய்து சான்றளித்துள்ளனர்.

இதன் மூலம் சர்வதேச அளவில் தமிழ்நாடு DDU-GKY திட்டத்தின் வெளிப்படைத்தன்மை, செயல்பாடுகள் ஆகியவற்றின் மீதான நம்பகத்தன்மை, வேலைவாய்ப்பு நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களிடத்தில் அதிகரிக்கும் என்பதுடன், திட்டத்தின் பயன் தரத்துடன் பயனாளிகளுக்கு சென்று சேர்வதையும் உறுதி செய்கிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., அவர்களின் ஆலோசனையின்படி ISO முகமை TVV நிறுவனத்தின் மூலம் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு தரச்சான்று வழங்கப்பட்டுள்ளது.

தரச்சான்றிதழ் பெற DDU-GKY முதன்மை இயக்கு அலுவலர் திரு. ஜே. கணேஷ் கண்ணா, இணை இயக்குநர் திருமதி என். கவிதப்பிரியா, மாநில திட்ட மேலாளர் திரு. ஜி. குமரன், CTSA திட்ட மேலாளர் திரு. சந்தோஷ், உதவித் திட்ட அலுவலர்கள் திரு. முரளி, திரு. சம்பத், கண்காணிப்பாளர் திரு. ரங்கையன், இளநிலை உதவியாளர்கள் திருமதி தமிழரசி, செல்வி கலைவாணி, திரு. முருகன், செல்வி மெக்டலீன் பெர்சி ஆகியோர் உரிய முன்னேற்பாடுகளை செய்திருந்தனர்.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் ஏற்பாடு செய்த எழுத்துப் பட்டறை

ஊரக மக்களுக்கு திறன் மேம்பாட்டின் மூலம் நிலையான வருமானத்தை உருவாக்கிடவும், சுய வேலைவாய்ப்புகளை உறுதி செய்திடவும் மற்றும் விவசாயத்தில் அதிக மதிப்புகளை கூட்டவும் சமுதாய பண்ணை மற்றும் சமுதாய திறன் பள்ளிகளை உருவாக்கிட தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் திட்டமிட்டுள்ளது. இவைகள் மூலம் ஆற்றல் மிகுந்த தொழில் முனைவோரை உருவாக்கிடவும், சந்தை சார்ந்த விழிப்புணர்வை வழங்கி தொழில் முனைவோரின் வாழ்வில் மேம்பாட்டை உருவாக்கிட “தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்” திட்டமிட்டுள்ளது.

ஊராட்சிகளில் நிறுவப்படும் சமுதாய பண்ணை மற்றும் சமுதாய திறன் பள்ளிகளை ஸ்பார்க்ஸ் மற்றும் பயிற்சியாளர்களால் தொகுக்கவும் மற்றும் இந்த பண்ணைத் தொழில்களில் ஈடுபடும் மக்களுக்கு ஸ்பார்க்ஸ் பயிற்சியாளர்களால் பண்ணைசார் பயிற்சிகளை அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தால் 6,164 சமுதாய வல்லுநர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

இதன் பொருட்டு 12 ஜனவரி 2021 அன்று தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் சமுதாய பண்ணை பள்ளிக்கான எழுத்துப் பட்டறை ஒன்றை ஏற்பாடு செய்தது. இந்த கூட்டத்தில் வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை பராமரிப்பு, மீன்வளம், வனத்துறை மற்றும் வரித்துறை அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இந்த எழுத்துப் பட்டறையின் நோக்கம் மதிப்பீட்டு அளவுகோல்களை உருவாக்கவும் மற்றும் சமூக நிபுணர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டியதன் அவசியத்தை புரிந்து கொள்ளவும் மற்றும் மதிப்பீட்டையும், சான்றிதழ் வழங்கும் சாத்தியங்களையும் புரிந்து கொள்வது ஆகும்.

இணை மானிய நிதி திட்டத்தின் திறன் பயிற்சி



தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டப் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டின் ஒரு பகுதியாக 2020 டிசம்பர் 29 முதல் 31 வரை மற்றும் 2021 ஜனவரி 5 முதல் 7 வரை நடைபெற்ற நிறுவன நிதியுதவி, வணிகத் திட்டம் உருவாக்குதல் மற்றும் இணை மானிய நிதி செயல்பாடு குறித்த பயிற்சி நடைபெற்றது.

பயிற்சியின் நோக்கம் பின்வருமாறு :

- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் நிதி இணைப்புக்கான சாத்தியக் கூறுகளுக்கான வாய்ப்புகளை அறிதல், வாய்ப்பு மற்றும் தற்போதைய நிலை அறிதல்
- சாத்தியமான தொழில் முனைவோரை அடையாளம் கண்டு விவரக்குறிப்பு பதிவு செய்தல்
- வணிகத் திட்ட மேம்பாட்டினை திட்டமிடுதல்
- வங்கி / நிதி நிறுவன இணைப்புகள்: கடன் பெறுதல் மற்றும் தள்ளுபடி விவரங்களை எடுத்துரைத்தல்
- வங்கி / நிதி நிறுவன இணைப்புகள்: இணை மானிய நிதி திட்டத்தின் கீழ் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்கள் (கடன் விதிமுறைகள்) தெளிவுபடுத்துதல்
- தனிநபர் / குழு நிறுவனங்களுக்கான தரமான வணிகத் திட்டங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட பயிற்சி. மேலும், நீண்ட காலத்திற்கு நிதி இணைப்புகளை உருவாக்குவதற்கான வழிவகைகளை அறிந்து கொள்வதற்கு ஒட்டுமொத்தமாக திட்டமிடப்பட்ட பயிற்சி.
- இணை மானிய நிதி திட்டத்தின், கடன் வழிகாட்டுதல்களின் முக்கிய அம்சங்களில், ஊழியர்கள் விழிப்புடன் இருக்க உதவுதல்
- திட்ட மதிப்பீட்டையும், கடன் ஆபத்து மதிப்பீட்டையும் புரிந்து கொண்டு, வணிகத் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ஆகியவற்றில் ஈடுபடுதல்
- வங்கி / நிறுவன நிதியுதவிக்கு தேவையான ஆவணங்களுக்காக பயனாளர்களை விஸீப்பூட்டுதல்
- வங்கிகளின் தற்போதைய கடன் இணைப்புத் திட்டங்களைப் பற்றி பயனாளிகளுக்குத் தெரிவித்தல்
- கடன் வழங்கும் நிதி நிறுவனங்கள் மற்றும் பயிற்சியாளர்களுடனான நேரடி தொடர்புகளிலிருந்து கற்றுக்கொள்ள வாய்ப்பு கொடுத்தல்

பங்கேற்பாளர்கள் பயிற்சியில் தங்களை முழுமையாகப் ஈடுபடுத்திக் கொண்டால் வணிகத் திட்டங்களை உருவாக்குவதற்கும், மேம்படுத்துவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் மற்றும் திட்ட நோக்கங்களை சீராக செயல்படுத்துவதற்கும் பயனாக இருக்கும். மேலும், இலக்கு வைக்கப்பட்ட நுண், குறு மற்றும் சிறு நிறுவனங்களுக்கான முறையான நிதி இணைப்புகளை எளிமையாக ஏற்படுத்தித் தருவதற்கு பயனுள்ளதாக இருக்கும்.

`ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்புத் திட்டம்'

திருவண்ணாமலை மாவட்டத்தில், “ஒரு மாவட்டம், ஒரு தயாரிப்புத் திட்டம்' (ODOP) திட்டத்தின் கீழ், (கடலை எண்ணெய்) சமையல் எண்ணெய் உணவுப் பொருளாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்வாயிலாக, 7 பயனாளர்களுக்கு அவர்களின் மொத்த தொழிலுக்காக ரூ. 60 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(ODOP) திட்டம், பாரதப் பிரதமர் நுண் உணவு பதப்படுத்தும் நிறுவனங்களை முறைப்படுத்துதல் (PMFME) திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டம் உள்ளூர், உள்நாட்டு தயாரிப்புகள் மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தின் கைவினைப் பொருட்கள் மற்றும் பல்வேறு மேம்பாட்டுத் திட்டத்தினை ஊக்குவிக்கிறது.

ஊரகங்களில் உள்ள ஏராளமான உணவுபதப்படுத்தும் பிரிவுகளை மேம்படுத்துவதற்காகவும், சுய உதவிக் குழுக்களால் நடத்தப்படும் புதிய திட்டங்கள் மற்றும் விவசாய உற்பத்தியாளர்களுக்கும், ரூபாய் 10 லட்சம் வரை, 30% மானியம் இணைக்கப்பட்ட கடனுதவி வழங்கப்படுகிறது.

உழவுக்கு வலிமை சேர்த்த ஊரக புத்தாக்கத் திட்டம்

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியம், உன்னங்குளம் ஊராட்சியில் வசிக்கும் 20 பெண்கள் ஒன்றிணைந்து நெல் விவசாய ஆர்வலர் குழுவாக இயங்கி வருகின்றனர். தங்களின் செயல்பாடு குறித்து நெல் விவசாய ஆர்வலர் குழு உறுப்பினர்கள் கூறும்போது, "எங்களது ஊராட்சியில் பெரும்பான்மையானோர் விவசாயத்தையே பிரதான தொழிலாகக் கொண்டுள்ளோம். நாங்கள் 20 பெண்கள் இணைந்து நெல் விவசாய ஆர்வலர் குழுவாக இயங்கி வருகிறோம்.

கொரோனா ஊரடங்கு காலத்தில் விவசாய உற்பத்தி மற்றும் விற்பனை செய்ய முடியாமல் மிகுந்த கஷ்டத்தில் இருந்தோம். அப்பொழுது தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் கோவிட் 19 சிறப்பு நிதி தொகுப்பு மூலம் ரூ. 1,50,000/- மூலதன நிதி பெற்றோம். அதனுடன் எங்களது குழு உறுப்பினர்களின் சொந்த பங்களிப்பு ரூ.40,000/- சேர்த்து, ரூ.1,90,000/- மதிப்புள்ள உழவு இயந்திரம் (பவர்டில்லர்) வாங்கினோம். தற்போது விவசாய சாகுபடி செய்யும் காலம். எங்கள் குழுவின் சொந்த இயந்திரம் மூலம் உழவு செய்து பயிரிடும் பணி செய்து வருகிறோம். எங்கள் உழவுக்கு உயிர் கொடுத்த ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு நன்றி" என்று மகிழ்ச்சி பொங்க கூறினர்.

கை கொடுத்த சோப்பு தொழில்

திருச்சி மாவட்டம், முசிறி ஒன்றியம், கரட்டாம்பட்டி ஊராட்சியில் வசித்து வரும் என் பெயர் கிருத்திகா சக்திநாதன் (வயது 33), நான் M.Com., MBA. வரை படித்துள்ளேன். தனியார் நிறுவனத்தில் பணி புரிந்து வந்த எனது கணவர் கொரோனா ஊரடங்கு காரணமாக வேலை இழந்து, வேறு வழியில்லாமல் மாட்டுத் தீவனம் விற்பனை செய்து வந்தார். ஆனால் அதுவும் லாபகரமானதாக இல்லை. இந்நிலையில் எனக்கு சொந்தமாக தொழில் ஆரம்பிக்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. எனது நண்பர் வீட்டிற்கு சென்ற பொழுது அவர் சோப்பு வியாபாரம் குறித்து பேசினார். நானும் அவரிடம் சோப்பு தயாரிக்கும் பயிற்சி பெற்றேன்.

கொரோனா நோய் தொற்று காலத்தில் மிகவும் சிரமத்துடன் வாழ்க்கையை நடத்தி வந்தேன். அந்த நேரத்தில்தான் தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்தின் மூலம் தனிநபர் தொழில் செய்வதற்கு சிறப்பு நிதி உதவி அளிப்பதாக ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் உறுப்பினர்கள் கூறினர். நான் எனக்கு கடன் வேண்டி விண்ணப்பித்து, என் தொழிலுக்காக ரூ. 30,000/ குறைந்த வட்டியில் கடன் பெற்று, அந்தத் தொகையைக் கொண்டு, மூலப்பொருட்கள் வாங்கி, சோப்பு தயார் செய்து, சுய உதவிக் குழுவினருக்கும், சிறு கடைகளுக்கும் விற்பனை செய்து வருமானம் ஈட்டுகிறேன். தற்போது எனது வறுமை நீங்கி வருகிறது.

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் வழங்கிய கோவிட்19 சிறப்பு நிதி உதவி என்னை முதலாளியாக மாற்றியுள்ளது. தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு எனது நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

கைத்தறி மீண்டும் துளிர்கிறது

என் பெயர் சந்திரா, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் வட்டாரம், தொட்டம்பாளையம் ஊராட்சியில் வசித்து வரும் நான், ஒரு ஏழைக் குடும்பத்தினைச் சார்ந்த நெசவுத் தொழிலாளி. சரியான வருமானம் இல்லாமல் குடும்பத்தை வறுமையில் நடத்திக் கொண்டு வந்தேன். அந்த நேரத்தில் கொரோனா என்னும் பெருந்துயரம் வந்து சேர்ந்தது. வறுமையும், வேலையின்மையும் என்னை வாட்டி வதைத்தது. வாழ்க்கையில் துயரத்தின் உச்சத்திற்கே சென்று கடைசி நம்பிக்கையையும் இழந்து நின்ற என் வாழ்வில் புதுவசந்தமாக வந்தது தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்.

இந்தத் திட்டத்தின் மூலம் நான் ரூ.42,000/- கடன் பெற்று, கைத்தறி தொழிலுக்குத் தேவையான நூல், பாவு ஆகியவற்றை வாங்கி மீண்டும் நல்லபடியாக எனது தொழிலை செய்து, தற்போது மாதம் ரூ.15,000/- வரை சம்பாதிக்கிறேன். எனது குடும்பத்தில் இழந்த சந்தோஷம் மீண்டும் துளிர்கிறது. மனநிம்மதி குடும்பத்தில் மீண்டும் கிடைத்தது, என் வாழ்வில் ஒளியேற்றிய ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு நன்றி.

தொழில் முனைவோராக்கிய தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

என் பெயர் நிஸார் அகமது, நான் மதுரை மாவட்டம், விளாச்சேரி ஊராட்சியில் வசித்து வருகிறேன். புலம் பெயர்ந்து மீண்டும் திரும்பி வந்த எனக்கு, சொந்தமாக மசாலாப் பொருட்கள் தயாரிப்பு தொழில் துவங்குவதற்கு முதலீட்டு நிதி அளித்த, தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டத்திற்கு மனமார்ந்த நன்றி. இப்பொழுது நான், என் சொந்த ஊரில் தங்கியபடி மசாலாப் பொருட்கள் மற்றும் ஜவுளி கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகிறேன். தொழில் முனைவோராக மாற்றம் அடைந்த நான், மாதம் ரூ. 26,000/- முதல் ரூ.30,000/- வரை லாபம் ஈட்டி என் வாழ்வில் வளம் காண்கிறேன். இளம் வயதில் தொழில் துவங்கி, முதலாளி என்ற பட்டத்துடன், ஊர் பொது காரியங்களில் தலைமைப் பொறுப்புடன் கௌரவத்துடன் வாழ்கிறேன்.

பழங்கள், காய்கறி, பூக்கடைக்குச் செல்லும்போது துணிப் பைகளைப் பயன்படுத்தவும்.

உணவகம் மற்றும் மளிகைக் கடைகளில் பொருட்களை வாங்கும் போது வாழை இலை, தையல் இலை, பாக்கு மட்டை, சில்வர் பாத்திரங்களைப் பயன்படுத்தவும்.

பொருட்களை வாங்க மூங்கில் கூடைகள் அல்லது சணல் பைகளை பயன்படுத்தவும்.

வீடுகளிலும் அலுவலகங்களிலும் மற்றும் குப்பைகள் அதிகமாகச் சேகரமாகும் இடங்களில் மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தனித்தனியாகப் பிரித்துப் போட வேண்டும். மட்கும் குப்பைகள், காய்கறிக் கழிவுகள், இலை, தழைகள், வீட்டுக்கழிவுகளை அரைக்கும் சிறு இயந்திரம் நடைமுறைக்கு வரவேண்டும். இதன்மூலம் குப்பை அள்ளுபவர்களே அவற்றைப் பொடியாக்கி வீடுகளுக்கு, பண்ணைகளுக்கு உரமாகத் தரலாம்.

குழந்தைகளுக்கு பிளாஸ்டிக் பொம்மைகளை வாங்கித் தருவதற்கு பதிலாக மண் பொம்மைகள், மர பொம்மைகள், மூங்கில் வேலைப்பாடுகளால் அமைந்த கைவினைப் பொருட்களை வாங்கிக் கொடுக்கலாம்.

பிளாஸ்டிக் பொருட்களைத் தவிர்ப்போம்...! சுற்றுச்சூழலை காப்போம்...!!

மாதர்தம்மைப் போற்றுவோம்... !

இன்றைய உலகில் பெண்கள் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்குவது மறுக்க முடியாத உண்மையாகும். வீட்டிற்குள்ளே இருந்த பெண் சமுதாயம் தற்போது ஒவ்வொரு துறையிலும் ஆண்களுக்கு நிகராக சாதனைகள் பலவற்றைப் படைத்துக் கொண்டிருக்கிறது என்றால், அதற்கு வித்திட்ட பல்வேறு போராட்டங்களின் வெற்றி தினமே இந்த மகளிர் தினமாகும்.

ஆணாதிக்க சமுதாயத்திலிருந்து பெண்களுக்கான உரிமைகளை வென்றெடுத்த நாள் தான் மகளிர் தினம். பெண்களுக்கான சமத்துவம், உரிமைகளை வலியுறுத்துவதற்காகவும் மகளிர் தினம் கொண்டாடப்படுகிறது. பெண்ணுரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மார்ச்8, 1857இல் நியூயார்க்கில் உழைக்கும் வர்க்கப் பெண்களின் அமைப்புகள் தோன்றி போராட்டங்களை முன்னெடுத்தன. நாட்டில் இயற்றப்பட்ட புரட்சிகர தீர்மானங்களும், சட்டத் திருத்தங்கள் மூலமான உரிமைகளையும் முன் வைத்து போராட்டங்கள் நடத்தப்பட்டது.

18ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தொழிற்சாலைகள் மற்றும் அலுவலகங்களில் ஆண்கள் மட்டுமே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். இந்த நிலையில் 1857ம் ஆண்டு நிலக்கரி சுரங்கங்கள், தொழிற்சாலைகள், நிறுவனங்களில் பெண்களுக்கு பணி வாய்ப்பு தரப்பட்டது. பெண்களால் தொழிற்சாலைகளிலும் வேலை செய்ய முடியும் என்பது உலகுக்கு உணர்த்தப்பட்டது.

தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக நம் உறவின் அனைத்து பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள்.

ஆண்களுக்கு நிகராக பணியாற்ற வாய்ப்பு கிடைத்ததே தவிர, ஊதியத்தில் பெண்களுக்கு அநீதி இழைக்கப்பட்டது. இதனால் துயரத்தில் மூழ்கிக் கிடந்த பெண்கள் கொதித்தெழுந்தனர். ஆண்களுக்கு இணையான ஊதியம், உரிமைகள் வழங்கக் கோரி குரல் எழுப்பினர். அப்போதைய அமெரிக்க அரசு செவி சாய்க்கவில்லை. இதனால் அமெரிக்கா முழுவதும் கிளர்ந்தெழுந்த பெண் தொழிலாளர்கள், 1857ம் ஆண்டு மார்ச் 8ம் தேதி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தை அரசின் ஆதரவுடன் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் ஒடுக்கினர்.

அடிமைத்தனம் எங்கு இருக்கின்றதோ அங்குதான் சுதந்திரத்திற்கான தேடல் இருக்கும். பெண் அடிமைத்தனம் எங்கு இருக்கின்றதோ அங்குதான் பெண் சுதந்திரம் மற்றும் பெண்கள் எழுச்சி தேவைப்படுகிறது. பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமஉரிமையை மையமாக வைத்து கி.பி. 1909ல் அமெரிக்க சோசலிஸ்ட் கட்சியினர் முதல் முதலாக மகளிர் தினத்தை பிப்ரவரி மாதம் 28ம் தேதி கொண்டாடினர். இதன் முடிவாக 1911, மார்ச் 19 அன்று ஆஸ்திரியா, டென்மார்க், ஜெர்மனி மற்றும் சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளில் பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட ஆண்களும் பெண்களும் அரசு அலுவலகங்கள் முன் திரண்டு வேலைவாய்ப்பு மற்றும் அரசியலில் சம உரிமை அளிக்க வேண்டும் எனப் போராட்டம் நடத்தினர். இதனால் ஏற்பட்ட கிளர்ச்சியினால் அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா போன்ற நாடுகளில் வேறுபட்ட நாட்களில் 1917ஆம் ஆண்டு வரை இவ்வாறான குரல்கள் ஒலித்து வந்தன.

1917க்குப்பின் உலக மகளிர் அமைப்புகள் ஒன்று கூடி மகளிர் தினத்தை மார்ச்8 அன்று கட்டமைத்தனர். இத்தகைய பெண்கள் போராட்டங்களால் 1945 ல் சான்பிரான்ஸிஸ்கோவில் ஐக்கிய நாடுகள் ஒன்றுகூடி பெண்கள் சம உரிமை *(Gender Equality as a Fundamental Human Rights)* என்ற ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

அதன் பிறகு 1907ம் ஆண்டு சம ஊதியம், சம உரிமை கேட்டு பெண்கள் போராடத் தொடங்கினர். 1910ம் ஆண்டு டென்மார்க் நாட்டில், பெண்கள் உரிமை மாநாடு நடந்தேறியது. இதில் உலகின் பல நாடுகளை சேர்ந்த பெண்களின் அமைப்புகள் கலந்து கொண்டு, தங்களது ஒற்றுமையை உலகிற்கு காட்டினர். இந்த மாநாட்டில் கலந்து கொண்ட ஜெர்மனியைச் சேர்ந்த கிளாரே செர்கினே, மார்ச் 8ம் தேதியை மகளிர் தினமாக கொண்டாட வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்ற வலியுறுத்தினார். பல்வேறு தடங்கல்களால் இந்த தீர்மானம் நிறைவேறவில்லை என்பது வருந்தத்தக்கது. 1920ம் ஆண்டு சோவியத் ரஷ்யாவில் செயின்ட் பீட்டர்ஸ் நகரில் நடந்த பெண்களின் போராட்டத்தில் கலந்து கொண்ட ரஷ்யாவின் அலெக்ஸ்சாண்டிரா கெலன்ரா, ஆண்டுதோறும் மார்ச் 8ம் தேதி உலக மகளிர் தினத்தை கொண்டாட வேண்டும் என்று பிரகடனம் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இதையடுத்து 1921ம் ஆண்டு முதல் மார்ச் 8ம் தேதி உலக மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. 1975ம் ஆண்டை சர்வதேச மகளிர் ஆண்டாக ஐ.நா பிரகடனப்படுத்தியது.

தற்போது உலகின் பல நாடுகளில் சர்வதேச மகளிர் தினத்துக்கு விடுமுறை வழங்கப்படுகிறது என்பது பெண்கள் போராட்டத்திற்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்பது குறிப்பிடத்தக்கது. மென்மைக்கு ஒப்பானது தான் பெண்மை என்று சொல்லி சரித்திரத்தில் பெண்களின் திறமைகளை பல்வேறு இடங்களில் இருட்டடிப்பு செய்யப்பட்டிருந்தாலும் கூட அதற்கு சற்றும் சளைக்காமல் அணு முதல் அண்டம் வரை தமது திறமைகளை நிலைநாட்டிய வண்ணமே அன்று முதல் இன்றுவரை பெண் இனம் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

தாயாக, மனைவியாக, தங்கையாக, மகளாக நம் உறவின் அனைத்து பகுதியிலும் நீக்கமற நிறைந்திருப்பவர்கள் பெண்கள். தோல்விகளை கண்டு துவண்டு விடாது அதனை எதிர்கொண்டு வாழ்வில் வெற்றிக்கண்ட பல பெண்கள் நம் மத்தியில் வாழ்கின்றனர். அவ்வாறான பெண்களுக்கு மட்டுமன்றி அனைத்துலக பெண்களுக்கும் இன்றைய நாளில் மகளிர் தின வாழ்த்துகளை தெரிவிப்பதில் "**முற்றம்**" மகிழ்ச்சியடைகின்றது.



முற்றக் கச்சேரி

அன்புள்ள முற்றம் வாசகர்களே

முத்தவேடு கிராமத்தில் உள்ள பேச்சியம்மாளின் மாட்டுப் பண்ணைக்கு சமுதாய வள பயிற்றுனர் கிரிஜாவும், சுய உதவிக்குழு உறுப்பினர் ரம்யாவும் வருகிறார்கள். அங்கே அவர்களுக்குள் நடந்த உரையாடலை முற்றக் கச்சேரியாக இங்கே வழங்கியுள்ளோம்.

இடம் : சுய உதவிக் குழு அலுவலகம்

பேச்சி : வா கிரிஜா... வா ரம்யா...

கிரிஜா : எப்படி பேச்சியக்கா இருக்குற?

ரம்யா : நல்லா இருக்குறியா பேச்சி அக்கா?

பேச்சி : நல்லா இருக்கேன். நீங்க ரெண்டு பேரும் எப்படி இருக்கீங்க?

கிரிஜா, ரம்யா : நல்ல இருக்கிறோம்க்கா...

பேச்சி : ஆச்சரியமா இருக்குது...ரெண்டு பேரும் திடீர்னு வந்திருக்கீங்க?

கிரிஜா : இல்லக்கா...இந்த வழியாக வந்தோம் சரி அப்படியே பேச்சி அக்காவை பார்த்துவிட்டு போகலாமேன்னு தோணிச்சு. அதான் வந்தோம்.

பேச்சி : ரொம்ப சந்தோசம். ஒரு நிமிடம் இருங்க வந்திடுறேன்.
(பேச்சி இருவருக்கும் மோர் கொண்டு வந்து கொடுக்கிறாள்).

பேச்சி : இந்தாங்க வெயிலில் வந்துருக்கிறீங்க இந்த மோரை சாப்பிடுங்க.

ரம்யா : தேங்க்ஸ்க்கா...

கிரிஜா : மோர் சூப்பரா இருக்குதுக்கா...

ரம்யா : அக்கா... எத்தனை மாடு வச்சிருக்கீங்க அக்கா?

பேச்சி : கறவை மாடு மூணும், பசு கன்னு ரெண்டும் இருக்குது.

கிரிஜா : பேச்சி அக்கா... நீங்க தனியா மாட்டு பண்ணையை நடத்துவதற்கு பதிலாக நம்ம கிராமத்திலுள்ள மத்த மாடு வளக்கிறவங்களோடு சேர்ந்து ஒரு உற்பத்தியாளர் குழுவாக செயல்படலாமில்ல...

பேச்சி : ஆமா கிரிஜா... நானும் உன்கிட்ட இந்த உற்பத்தியாளர் குழுவைப்பற்றி கேக்கணும்னு நினைத்தேன். அதைப்பற்றி சொல்லேன்.

கிரிஜா : சொல்லறேன்க்கா

ரம்யா : ஆமா கிரிஜா அக்கா எனக்கும் உற்பத்தியாளர் குழுப் பற்றி தெரிஞ்சிக்கணும்னு தோணுது.

கிரிஜா : ஒரே தொழில் அல்லது ஒரே பொருள் உற்பத்தி பண்ற சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஒன்று சேர்த்து குழுவாக செயல்பட வைக்கிறதுதான் உற்பத்தியாளர் குழுவாகும்.

பேச்சி : ஓ...அப்படியா...

ரம்யா : ஒரு உற்பத்தியாளர் குழுவில் எத்தனை பேரு இருக்கலாம் அக்கா?

கிரிஜா : ஒரு உற்பத்தியாளர் குழுவில 15 முதல் 20 உறுப்பினர்கள் வரை இருக்கலாம்

ரம்யா : ஓ...அப்படியாக்கா...

பேச்சி : உற்பத்தியாளர் குழுவில் சேருவதற்கு ஏதாவது கட்டணம் செலுத்தனுமா கிரிஜா?

கிரிஜா : ஆமாங்கக்கா. ஒவ்வொரு உறுப்பினரும் உறுப்பினர் கட்டணமாக ரூ.100/- செலுத்த வேண்டும். அதுமட்டுமில்லாமல் அந்த உற்பத்தியாளர் குழுவுக்கு என்று ஒரு வங்கிக் கணக்கு துவங்கி இந்த உறுப்பினர் கட்டணங்களை அந்த வங்கிக் கணக்கில் சேமிக்க வேண்டும்.

பேச்சி : உற்பத்தியாளர் குழுவால் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் கிரிஜா?

கிரிஜா : பேச்சி அக்கா... உற்பத்தியாளர் குழுவில் இருக்கும் உறுப்பினர்களெல்லாம் ஒரே தொழில் செய்பவர்கள் என்பதால அவங்களால கூட்டாக மூலப்பொருள்களை கொள்முதல் செய்யவும், தயாரித்த பொருள்களை கூட்டாக சந்தைப்படுத்தவும் முடியும்.

ரம்யா : அப்படியாக்கா...

கிரிஜா : ஆமாம்டி. கூட்டாக மூலப்பொருள் வாங்குவதினால் தயாரிப்பு செலவு குறையும். மேலும் தயாரித்த பொருள்களை கூட்டாக சந்தைப்படுத்துவதினால் அதிக விலைக்கு விற்பனை செய்து கூடுதல் இலாபம் ஈட்டவும் முடியும்.

பேச்சி : சரி கிரிஜா... இந்த உற்பத்தியாளர் குழுக்களை யார் நடத்துவாங்க?

கிரிஜா : பேச்சி அக்கா ஒவ்வொரு உற்பத்தியாளர் குழுவுக்கும் அதனுடைய உறுப்பினர்களுக் குள்ளேயே ஒருவரை தலைவராகவும், இன்னொருவரை செயலாளராகவும், மற்றொருவரை பொருளாளராகவும் சுழல்

முறையில் தேர்ந்து எடுக்க வேண்டும்.

ரம்யா : அக்கா இந்த உற்பத்தியாளர் குழுவுக்கு அரசாங்கத்திடமிருந்து ஏதாவது உதவிகள் வழங்குவாங்களா அக்கா?

கிரிஜா : நல்ல கேள்வி கேட்ட ரம்யா.... ஒவ்வொரு உற்பத்தியாளர் குழுவும் 4 படிவங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

பேச்சி : என்னென்ன படிவங்க அது?

கிரிஜா : படிவம் 1ல் உற்பத்தியாளர் குழுவினுடைய அடிப்படை விபரம் தெரிவிக்கப்பட்டு, அதில் உற்பத்தியாளர் குழுவின் தலைவர், பொருளாளர், செயலாளர் ஆகியோருடைய பெயர் எழுதி, புகைப்படம் ஒட்டி கையெழுத்து இட வேண்டும். ஒவ்வொரு உற்பத்தியாளர் குழுவும் அவை மேற்கொள்ளுகின்ற தொழிலுக்குரிய வணிகத் திட்டத்தை படிவம் மூன்றில் கொடுத்துள்ளப்படி தயாரிக்க வேண்டும். இவ்வாறு தயாரித்த வணிகத் திட்டத்துக்கு படிவம் நான்கில் உள்ளபடி மதிப்பீடு செய்ய வேண்டும்.

ரம்யா : அப்பா... இத்தனை படிவம் தயாரிக்க வேண்டுமா அக்கா? கஷ்டமா இருக்காதா?

கிரிஜா : ரொம்ப சுலபம் ரம்யா... இதனை தயாரிக்க உங்களுக்கு உதவி செய்வதுதான் எனது வேலை. படிவம் 4ல் வழங்கப்படும் மதிப்பீடு 60 விழுக்காடுக்கு மேல் இருந்தால் தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் மூலம் அந்த உற்பத்தியாளர் குழுவுக்கு செயல் நிதியாக ரூ.1.50 இலட்சமும், உள்கட்டமைப்பு ஆதரவு நிதியாக ரூ.50,000/-மும் என மொத்தம் இரண்டு இலட்சம் ரூபாய் வரை வழங்குகின்றது.

பேச்சி : படிவம் 2 என்னன்னு சொல்லவே இல்லையே நீ...

கிரிஜா : சொல்லறேங்கா. இவ்வாறு பெறப்பெற்ற நிதியை எவ்வாறு உற்பத்தியாளர் குழு பயன்படுத்தியுள்ளது என்பதை படிவம் - 2 மூலம் தெரிவிக்க வேண்டும்.

ரம்யா : ஓ...சரிக்கா...

பேச்சி : கிரிஜா இந்த இரண்டு இலட்சம் ருபாய் நிதியை எதற்கு பயன்படுத்த வேண்டும்?

கிரிஜா : அக்கா... இந்த நிதியை அடிப்படையாகக் கொண்டு தேசிய வங்கிகளில் உற்பத்தியாளர் குழு தயாரித்த வணிகத் திட்டத்தை காட்டி கூடுதல் கடன் தொகைப் பெற்று தொழிலை விரிவுப்படுத்த உபயோகித்துக் கொள்ளலாம். மேலும் உற்பத்தியாளர் நிறுவனம் ஏற்படுத்தி அதற்கு உதவியாகவும் இந்நிதியை பயன்படுத்தலாம்.

பேச்சி : சிறப்பு கிரிஜா.... நல்ல உபயோகமான தகவலை சொன்ன... அப்போ சீக்கிரமே மாடு உற்பத்தியாளர் குழுவை தொடங்கி, அதுல என்னையும் ஒரு உறுப்பினராக சேர்த்து விட்டுடு கிரிஜா...

கிரிஜா : கண்டிப்பா செய்யறேன் அக்கா... அதானே எங்க வேலை...

ரம்யா : கிரிஜா அக்கா... போலாமா? குழந்தையை தூங்க வைச்சிட்டு வந்தேன். இப்ப எழுந்திருக்கிற நேரம்.

கிரிஜா : போலாம்டி. சரி பேச்சி அக்கா... நாங்க வரோம். உங்களை அடுத்த வாரம் வந்து பார்க்கிறேன்.

பேச்சி : சரி கிரிஜா.

கிரிஜாவும், ரம்யாவும் விடைபெற்றுச் செல்கிறார்கள்.

(முற்றக் கச்சேரி தொடரும்)

சிறு சேமிப்பு...!

சிறு துளித்தேன் என வண்டு மலர்கள் தோறும்
சென்றதனை எடுக்காமல் இருந்திருந்தால்,
சிறு துளியும் தேனடையாய் என்று மாறும்..
சிந்தித்தால் தேனாக இனிக்குதன்றோ!
எறும்புகளும் கார்காலம் வருதல் முன்னே
எப்படியும் வேண்டியதை கொஞ்சம் கொஞ்சம்
சிறுக அது சேர்க்காமல் இருந்திருந்தால்
சிற்றெறும்பும் மழைநாளில் என்ன செய்யும்...

எவரிடத்தும் பணமிருந்தால் யோசிக்காமல்
ஏராளச் செலவுகளே வீணே செய்வார்;
உவப்பின்றி வாழ்க்கையிலே சிக்கலற்று
உணர்கின்ற போதுதானே, நமது வாழ்வில்
தவறுதலாய் பண அருமை புரியா வண்ணம்
தக்கபடி சேமிக்காது போனோம் என்று
கவலையினால் மனம் துவண்டு அவர்கள்
வாழும் காலமெல்லாம் கண்ணீராய் வடிப்பதுண்டு...

நமக்கென்றே அஞ்சலகம் இருக்கும் போது
நலம்பெற நாம் சேமிப்புச் செய்ய வேண்டும்;
நமக்கென்றே சேர்த்தாலும் அதனால் நாடு(ம்)
நல்நோக்குத் திட்டங்கள் பல வகுக்கும்!
சமநிலைகள் திட்டத்தால் பலவும் கண்டு
சரித்திரத்தில் அழியாத ஏற்றம் காணும்
இமயம்போல் நமது நாடு உயர்ந்து நிற்க
இனிதான நம் வாழ்வில் மகிழ்ச்சி பொங்கும்...!

பாரதி பணிச்செல்வர்
கவிஞர் பரந்தூர் இராமசாமி

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (90,100 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN

“ சமூக ஒருங்கிணைப்பு மூலம் வாழ்வாதார மேம்பாடு அடைய செய்தல் ”

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கம்

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

Empowering Lives

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது பெருமைக்குரியது.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month

தொழில் முனைப்பில் வளர்ச்சி!
ஊரக மக்கள் மகிழ்ச்சி!

தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம் (TNRTP)

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

5வது தளம், திரு.வி.க. தொழிற்பேட்டை, சிட்கோ தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை- 600032, தமிழ்நாடு

(044) 434 43200 | tnrtpstate@gmail.com | www.tnrtp.org TNRTP tn_rtp tn_rtp